# DEPOSITION OF WITNESS

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, TIRUPATTUR.**

**CC. No. 63 /2025.**

1. Deposition of Witness for : PW4
2. Name : **செல்வி**
3. Father's Name : **துரைசாமி** (**க/பெ**)
4. Village : **கிழவயல்**
5. Taluk : **திருப்பத்தூர்**, **சிவகங்கை மாவட்டம்**
6. Calling : **கூலி**
7. Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 25**.03.2025.**

**முதல் விசாரணை**

நான் கிழவயலில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். விபத்தில் இறந்த துரைசாமி எனது கணவர். பட்டியல் சாட்சி 1 சுந்தரமூர்த்தி எனது கணவருடைய வியாபார பங்குதாரர். கடந்த 01.06.2018-ம் தேதி ஆலோபிளாக் மிஷினை எடுத்துக்கொண்டு எனது கணவரும் சுந்தரமூர்த்தியும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது திருப்பத்தூர் அருகே பூ வண்டி குறுக்கே வந்ததால் இருச்சக்கர வாகனத்தின் மீது லாரி மோதி விபத்து ஏற்பட்டதாக சுந்தரமூர்த்தி தகவல் சொன்னார். முதலில் திருப்பத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சேர்த்து பிறகு மேல் சிகிச்சைக்காக தருமபுரி அரசு மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் தெரிந்து அங்கு சென்று பார்த்தேன். எனது கணவருக்குஇடது காலில் பலத்த அடிப்பட்டிருந்தது. சிகிச்சை பலனின்றி அன்று இரவு

7.30 மணியளவில் இறந்துவிட்டார். எனது கணவரின் பிரேதத்தின் மீது போலீசார் விசாரணை செய்தார்கள் என்னையும் விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை** – இல்லை.

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

P V SANDILYAN Digitally signed by P V SANDILYAN

Chief Judicial Magistrate,
Tirupathur.